041247

COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
9 AUG 2008
CHENNAI-600 005

சுருக்கம்

சொத்துவரி – தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன கட்டிடங்களுக்கான சொத்துவரி – 1.10.87 முதல் திருத்திய சொத்துவரி நிர்ணயம் செய்து வசூல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசு ஆணை (டி)எண்.333 நாள் : 6.8.2008

படிக்கப்பட்டது :

1) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடிதம் ஆர்.சி.எண்.5052/95/பி3, நாள் 3.9.07
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.7917/97/ஆர்.1, நாள் 28.3.2008

ஆணை:

இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ள கருத்துகளை ஏற்று, சொத்துவரிக்கான பொதுச் சீராய்வின் போது அவ்வப்போது நகராட்சி நிர்வாக ஆணையரால் வெளியிடப்படும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு 1.10.87 முதல் திருத்திய சொத்துவரி நிர்ணயம் செய்து வசூல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் இதற்கு முன்பு செலுத்தியுள்ள சொத்துவரித் தொகையினை, திருத்திய வரி விதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படவிருக்கும் புதிய சொத்துவரி தொகையுடன் ஈடு செய்தது போக மீதித் தொகையை மட்டும் வசூலிக்குமாறு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை அறிவுறுத்துமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2) இவ்வாணை கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அ.சா.கு.எண்.16486/A2/08–1 நாள் 8.7.08–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்,
82, அண்ணாசாலை, கிண்டி, சென்னை –32.
நகல்
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்
6/8/08